பேச்சு - வகுப்பு - 5 / 6

## சுவாமி விபுலாநந்தர்

முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படும் சுவாமி விபுலாநந்தர் இலங்கையிலே கிழக்கு மாகாணத்திலுள்ள காரைதீவு என்னும் பழம்பதியிலே 1892 ஆம் ஆண்டு பிறந்தார். தனது இள வயதிலே கல்வியில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த சுவாமிகள் தமிழ், ஆங்கிலம், வடமொழி, லத்தீன் முதலிய பல மொழிகளைக் கற்று பெரிய கல்விமானாகச் சிறந்து விளங்கினார். தமிழகத்திலும் இலங்கையிலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பெருமையும் பெற்றவர். சுவாமிகள் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். அவர் எழுதிய " யாழ் நூல்" என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூல் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

தொடக்கத்தில் ஆசிரியப் பணியில் ஈடுபட்ட சுவாமிகள் தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்குச் சேவை செய்யும் நோக்குடன் துறவறம் பூண்டார். ஏழை மக்களின் கல்விக்குப் பெரிய தொண்டு புரிந்தார். மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அவர் அமைத்த சிவானந்தா வித்தியாலயம் அவரது கனவுகளை நனவாக்கி வருகிறது. அங்கே அவர்' சிறுவர் இல்லம் அமைத்து அநாதைச் சிறார்களுக்கும், வறிய பிள்ளைகளுக்கும் புகலிடம் அளித்தார். அவர்களுக்குக் கல்வியூட்டி அவர்களை சமூகத்தில் உயர்ச்சியடையச் செய்தார். சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இலங்கையின் பலபாகங்களிலும் பாடசாலைகளை அமைத்தார்.

சுவாமி விபுலாநந்தர் தமிழ் மொழிப் பற்றும் தமிழினப்பற்றும் மிக்கவராக வாழ்ந்தார். தமிழராகிய நாம் தமிழ் மொழிப்பற்று மிக்கவராகவும், தமிழ்ப் பண்பாட்டைப் பேணுபவர்களாகவும் வாழ வேண்டும் என்ற அறிவுரையை எமக்குப் போதித்தவர் சுவாமி விபுலாநந்தர். அவர் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியராகவும், இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளின் முகாமையாலராகவும், பாடசாலை அதிபராகவும், ஆசிரியராகவும், கடமை ஆற்றியவர். சிறுவர்களாகிய நாங்கள் சுவாமி விபுலாநந்தர் கூறிய நல்வழிகளைப் பெரியோர் வழி கேட்டறிந்து நல்வழியில் வாழ்வோமாக -

**“வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது,”**

நன்றி, வணக்கம்.